# பாடம்-3

“ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார் (ஆதி. 1:1) இந்த வார்த்தைகளைக் கொண்டு திருமறை ஆரம்பிக்கின்றது. ஆரம்பத்திலேயே மனிதனுடைய மிக முக்கியமான கேள்விகளுக்கு வேதம் பதிலளிக்கிறது. “மனிதன் எங்கிருந்து வந்தான்? அக்கேள்வி. “மனிதன்தேவனிடத்திலிருந்து வந்தான்” என்பதே அதற்குரிய பதில்.

## படைப்பின் ஆறுநாட்கள்

உலகத்திலுள்ளவைகள் யாவையும் படைப்பதற்கு தேவன் ஆறுநாட்களை எடுத்துக் கொண்டார். இந்த ஒவ்வொரு நாளும் 24 மணி நேரத்தை உடையதாயும், “காலை” “மாலை”, இவ்விரண்டையும் தன்னுள் அடக்கியதாயும் இருந்தது. ஒவ்வொரு நாளிலும் தேவன் எவைகளை படைத்தார் என்பதை கீழ்காணும் அட்டவனை மூலம் நாம் அறியமுடியும்.

| | | |
|---|---|---|
| முதல் நாளில் | - | வெளிச்சம் |
| இரண்டாம் நாளில | - | ஆகாயபிரிவு |
| மூன்றாம் நாளில் | - | வெட்டாந்தரை, புல், பூண்டு, தாவரங்கள் |
| நான்காம் நாளில் | - | சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் |
| ஐந்தாம் நாளில் | - | கடல் வாழ்வன, ஆகாயத்துப்பறவைகள் |
| ஆறாம் நாளில் | - | மிருகங்கள், ஆண், பெண் (மனிதர்கள்) |

ஆறு நாட்களில் இவைகளை படைத்த பின்பு ஏழாம் நாளில் தேவன் ஓய்ந்திருந்தார்

## ஆணும் பெண்ணும் படைக்கப்படுதல்

ஆணும் பெண்ணும் படைக்கப்பட்ட விதத்தைக் குறித்து திருமறை தெளிவாகக் கூறுகின்றது. “தேவனானிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்” (ஆதி. 2:27). அவர் ஆதாமாகிய இந்த மனிதனை ஏதேன் என்னும் அழகிய தோட்டத்தில் குடிவைத்தார். ஆதாமிடம அனைத்து மிருகங்களையும் அழைத்து வந்தார். ஆதாம் அவைகள் ஒவ்வொன்றிற்கும் பேரிட்டான். அதன் பின்பு தேவன் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை கொடுத்து அவனுடைய விலா எலும்பிலிருந்து பெண்ணை உண்டாக்கினார். “ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான். அவள் ஜீவனுள்ளோர் அனைவருக்கும் தாயானவள்.”.

## மனிதன் பாவம் செய்தல்

தேவன் மனிதனை ஏதேன் தோட்டத்தில் வைத்தபின்பு ஆதாமிடம் இத்தோட்டத்திலுள்ள எல்லா கனிகளையும் நீ புசிக்கலாம். ஆனால் தோட்டத்தின் நடுவிலுள்ள நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை மட்டும் புசிக்க வேண்டாம் என்று கூறினார். அப்படி புசித்தால், “அதைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்” என்று கூறினார். பிசாசானவன், பாம்பின் வடிவத்தில் வந்து புசிக்கக்கூடாத கனியை புசிக்கும்படி முதலில் ஏவாளை துாண்டினான். பின்பு ஆதாமும் அக்கனியை புசித்ததை திருமறை தெளிவாகக் கூறுகின்றது.

இவர்கள் தேவனுக்கு கீழ்படியாமல் போனதால் (பாவம் செய்ததலால்) அவர்கள் தோட்டத்தை விட்டு விரட்டபட்டனர். தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டனர். அவர்கள் ஆவிக்குரிய வகையில் (ஆத்துமாவில்) மரித்தனர். இன்று நாம் தேவனுக்கு

கீழ்ப்படியாவிட்டால் நாமும் ஆவிக்குரிய மரணத்தை அடைகிறோம். நாமும் தேவனிடமிருந்து பிரிக்கப்படுகின்றோம். இதற்கு தண்டனையாக, தேவன் ஏவாளைப் பார்த்து, நீ பிள்ளை பெறும்போது அதிக வேதனையை அடைவாய் என்றும், ஆதாமைப் பார்த்து, நீ உன் ஆகாரத்திற்காக கடினமாக உழைக்க வேண்டும் என்றும், சர்ப்பத்தைப் பார்த்து, நீ வயிற்றினால் ஊர்ந்து செல்ல வேண்டும் என்றும், பிசாசைப் பார்த்து நீ ஒருநாள் நசுக்கப்படுவாய் என்றும் கூறினார். (ஆதி. 3:14 முதல் 19 முடிய ரோமர் 16:20).

ஆதாமும் ஏவாளும் தோட்டத்தை விட்டுப் பிரிந்துபோன போனபின்பு அவர்களுக்கு இரு குமாரர்கள் பிறந்தார்கள். மூத்தவன் பெயர் ''காயீன்'', இளையவன் பெயர் ''ஆபேரல்'' என்றும் அழைக்கப்பட்டனர். தேவன் இந்த இருவரையும் நோக்கி தனக்கு பலிசெலுத்த வேண்டுமெனக் கட்டளையிட்டார். காயீன் தேவன் கேட்டதை விட்டுவிட்டு கேளாததைக் கொடுத்தான். (தேவனுக்கு கீழ்படியாத இந்த காயீனின் செய்கை பாவாமாகும்.) தேவன் ஆபேலுடைய காணிக்கையை ஏற்றுக்கொண்டதால் காயீன் கோபமடைந்து ஆபேலைக் கொலைச்செய்தான். சில காலம் கழித்து ஆதாம் ஏவாளும் வேறு சில பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் ஒருவன் ''சேத்'' என்னும் பெயருடையவன். இவனுடைய வம்சத்தில்தான் இயேசுகிறிஸ்து பிற்காலத்தில் பிறந்தார்.

இப்பாடத்தில் வேதகாமத்திலுள்ள முதல் நான்கு அதிகாரங்களிலுள்ளவைகளைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். இந்த அதிகாரங்களை நீங்கள் படித்தால் இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்வீர்கள்.